[1979 மார்ச் 3

சௌடாம்பிகை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்.

*வினா எண் 217— திரு ஆ. நடராசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் வெள்ளலூர் ஸ்ரீசௌடாம்பிகை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சங்கம் லாபகரமாக நடைபெறுகிறதா ?

(ஆ) அங்கு தற்போது தேங்கியுள்ள சரக்கு எவ்வளவு ?

(இ) இதனால் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனரா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :

(அ) ஆம்.

(ஆ) இப்போது இருப்பில் உள்ள சரக்குகளின் விலை ரூ. 36,000. இது மாத உற்பத்தியில் பாதி அளவேயாகும்.

(இ) இதனால் நெசவாளர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

திரு. ஆ. நடராசன் : சென்ற ஆண்டு இந்தச் சங்கத்திற்கு எவ்வளவு ரூபாய லாபம் வந்தது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சென்ற ஆண்டு ஆரம்ப நிலையில் இந்தச் சங்கத்தில் துணித் தேக்கம் அதிகம் இருந்ததால் ஓரளவு நஷ்டத்தில் இயங்கியது. ஆனால் சென்ற ஆண்டு அறிவித்த 20% ரிபேட்டினால் தேங்கிக் கிடந்த துணிகள் அனைத்தும் விற்பனை செய்ததாலும், காசுக் கடன் அதிகரித்திருப்பதாலும் தற்போது அச்சங்கம் லாபத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

வினா எண். 501—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கயவசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974, 1975, 1976 ஆகிய வருடங்களில் வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் எந்தெந்த புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விடப்பட்டன?

(ஆ) அவற்றுள் எத்தனை வழித்தடங்கள் தனியார்த் துறை, போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு கொடுக்கப்பட்டன ?

(இ) இன்னும், எந்தெந்த வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதற்கான கோரிக்கை மனுக்கள் நிலுவையிலுள்ளன?